**கரந்தெனிய பிரதேச சபை**
**காலி மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 28 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 செப்தெம்பர் 08 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் விவரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்ந்து, கரன்தெனிய பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) ரூபா 1,080,000 தொகைக்கான நிலுவை ஒரே முறையில் பெறும் பணப் பெறுவனவு மூலதன உதவி பெறுவனவு கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) நிதிக் கூற்றுக்களில் கடன் கொடுத்தோர் ஏற்பாடுகள் மேற் கொண்டிருக்காத போது வெலிவிட்டிய திவதுர பிரதேச சபைக்கு முத்திரைக் கட்டணமாக ரூபா 265,408 தொகை கொடுப்பனவு செய்திருந்தது.

(இ) 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 35,520 தொகைக்கான நிலுவை வியாபார வரியினை கணக்குகளில் காட்டப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்

நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கூட்டுத்தொகை ரூபா 17,523,034 தொகைக்கான 03 கணக்கு விடயங்கள் தொடர்பாக மீதிகள் மற்றும் அதனோடு தொடர்புடைய பதிவேடுகளில் காட்டப்பட்டுள்ள மீதிகளுக்கிடையே வித்தியாசங்கள் காணப்பட்டதுடன், அவதானிக்கப்பட்ட சமமின்மைகளின் கூட்டுத்தொகை ரூபா 272,697 ஆகும்.

#### 1.3.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

**(அ) பெற வேண்டிய கணக்குகள்**

(i) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு காணப்பட்ட கூட்டுத்தொகை ரூபா 42,200,919 தொகையான 2001 ஆண்டு முதல் முன் கொண்டுவரப்படும் 08 பெறவேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதியினை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ii) 03 வருடங்களை விட மிகையான காலம் முதல் முன் கொண்டுவந்து காணப்படும் ரூபா 1,746,399 தொகைக்கான நிலுவை ஒரே முறையில் செலுத்தும் பணம் 2017 திசெம்பர் 31 திகதி வரை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்**

மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு, 02 வருடங்கள் மற்றும் 05 வருடங்களுக்கு இடைப்பட்ட காலப் பகுதி தொடர்பான ரூபா 12,380,070 தொகைக்கான கடன் மீதிகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 1.3.4 கணக்காய்விற்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை

**தகவல்கள் கணக்காய்விற்காக சமர்பிக்கப்படாமை**

தேவையான தகவல்கள் சமர்பிக்கப்படாமையினால் கூட்டுத்தொகை 221,214,767 தொகைக்கான 05 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக பரிசோதனை செய்ய முடியாதிருந்தது.

### 1.3.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணக்கமின்மை சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளது.

| சட்டங்கள், விதிகள், பிரமாண ங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மைகள் |
|---|---|---|
| | ரூபா. | |
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டம் | | |
| பிரிவுகள் 134(1) மற்றும் (2) | - | சபைக்கு சொந்தமான முன்னேற்றப் பட்ட பிரதேச வீதவரி வலயங்கள் என பகிரங்கப்படுத்தி வீதவரி அறவீடு செய்து சபை நிதியத்தை வலுப்படுத்த முடியுமெனினும், அவ்வாறான கணிப்பீடு ஒன்று மேற் கொண்டு புதிய வீதவரி அலகுகளை இனங்கண்டிருக்க வில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணம் | | |
| நிதிப் பிரமாணங்கள் 396(ஈ) | 319,691 | சபையின் பொது வங்கிக் கணக்கு மற்றும் நிர்மாண வேலை கணக்குகளில் இருந்து வழங்கியிருந்த, கொடுப்பனவுக்காக சமர்ப்பிக்கப்படாத 11 காசோலைகள் தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |

| | |
|---|---|
| (இ) 2016 திசெம்பர் 29 திகதிய 30/2016 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை | சபைக்கு சொந்தமான வாகனங்களின் எரிபொருள் எரிவு பரிசோதிக்கப்பட்டிருக்க வில்லை. |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுகளின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 20,201,662 தொகையாக காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 18,252,258 தொகை ஆகக் காணப்பட்டது.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

சபைக்கு சொந்தமான பொது வங்கி கணக்கின் சராசரி மாதாந்த மீதி ரூபா 3,211,220 தொகையாக இருந்த போதிலும், அந்த மிகைப் பணத்தை முதலீடு செய்து மேலதிக வருமானம் ஒன்று பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 2.3 வருமான நிருவாகம்

#### 2.3.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்காக சமர்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டை இடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பீட்டு வருமனம் | சிட்டையி டப்பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையி டப்பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரி மற்றும் வரி | 720,000 | 776,553 | 592,363 | 3,286,121 | 2,582,041 | 782,026 | 234,756 | 3,079,874 |
| வாடகை | 8,145,400 | 3,878,200 | 2,781,042 | 6,977,650 | 6,349,80 | 3,924,220 | 2,558,418 | 5,948,839 |
| அனுமதிப் பத்தி ரக் கட்டணம் | 300,000 | 235,986 | 235,986 | 123,350 | 300,000 | 338,080 | 338,080 | 123,350 |
| ஏனைய வரு மானங்கள் | 2,411,000 | 25,354,955 | 10,527,128 | 48,912,095 | 12,961,000 | 20,319,120 | 13,817,114 | 30,811,380 |
| மொத்தம் | 11,576,400 | 30,245,694 | 14,136,519 | 59,299,216 | 22,138,841 | 25,363,446 | 16,948,368 | 39,963,443 |

### 2.3.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றுகை

மீளாய்வாண்டிற்காக மதிப்பிடப்பட்ட வருமானம் ரூபா 11,576,400 தொகையும், சிட்டையிடப்பட்ட வருமானம் ரூபா 30,245,694 தொகையும் ஆண்டின் போது சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 14,136,519 தொகையும் காணப்பட்டதுடன், நிலுவை வருமானம் ரூபா 59,299,216 தொகை ஆகக் காணப்பட்டது.

### 2.3.3 வீதவரியும் வரியும்

மீளாய்வாண்டிற்கான சிட்டையிட்ட வருமானம் மற்றும் வருட ஆரம்பத்திற்கான நிலுவை மீதியுடன் ரூபா 3,856,427 தொகை சேகரிக்கப்பட வேண்டியிருந்த வருமானத்தில் ஆண்டின் போது சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 592,363 தொகை ஆக காணப்பட்டமையால் வருட இறுதியில் உள்ளவாறு நிலுவை மீதி ரூபா 3,286,121 தொகை ஆகும்.

### 2.3.4 வாடகை

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகள் தொடர்பாக அறவிடப்படவேண்டிக் காணப்பட்ட ரூபா 9,827,039 தொகைக்கான வாடகையில் ஆண்டின் போது அறவிடப்பட்டிருந்தது ரூ 2,781,042 தொகை அதாவது 28 சதவீதம் மாத்திரமே. இதன் காரணமாக ஆண்டு இறுதியில் உள்ளவாறு நிலுவைத் தொகை ரூ. 6,977,650 வரை அதிகரித்திருந்தது. எவ்வாறாயினும், நிலுவைத் தொகை அறவீடு செய்வதற்காக 1987 இன் 15 ம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 159(1) இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை

### 2.3.5 அனுமதிப் பத்திரக் கட்டணம்

மீளாய்வாண்டிற்காக சிட்டையிடப்பட்ட வருமானம் ரூபா 235,986 தொகையாக இருந்துடன், அந்தப் பணத்தை அறவீடு செய்திருந்ததுடன் நிலுவை மீதியாகிய ரூபா 123,350 தொகையில் இருந்து ஒரு தொகையேனும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 2.3.6 நீதி மன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதான செயளாலரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் 2017 திசெம்பர் 31 திகதி உள்ளவாறு நீதி மன்றத் தண்டப்பணமாக ரூபா 4,496,584 மற்றும் முத்திரைக் கட்டணமாக ரூபா 42,645,986 தொகை கிடைக்க வேண்டியிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

பிரதேசசபை சட்டத்தின் 3 ஆம் பிரிவின் பிரகாரம் மக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது பெருந்தெருக்கல் தொடர்பாக விடயங்களை முறைப்படுத்துதல் மற்றும் நிர்வகித்தல், பொது சுகபோக வாழ்வு, வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த கடமைகளை நிறைவேற்றுதல் தொடர்பாக கண்டறியப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

#### (அ) செயல் நடவடிக்கை திட்டம்

ஆக்கப்பட்டுள்ள துணை விதிகளின் பிரகாரம் சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிக் காணப்பட்ட செயல்பணிகள் தொடர்பாக வருடாந்த செயல் நடவடிக்கை திட்டமொன்று தயாரித்திருக்கவில்லை.

**(ஆ) திண்மக் கழிவுப் பொருள்கள் முகாமைத்துவம்**

2015 ஏப்ரல் 15 திகதியின் பின்னர் பொது மக்களின் எதிர்ப்பின் காரணமாக ஊருகஸ்மன் ஹந்தியில் செயற்பட்ட சேதன பசளை செயற்திட்டம் நிறுத்துவதற்கு நேரிட்டிருந்தமையினால் சேதனப் பசளை உற்பத்திக்கு பயன்படுத்தப்பட்ட இயந்திர உபகரணங்கள் விளைவற்று காணப்பட்டது.

தனியார் கம்பனி ஒன்றினால் 99 வருட குத்தைகைக்கு எடுத்திருந்த, காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவிற்கு சொந்தமான காணி ஒன்றில் சபையின் அதிகார பிரதேசத்தில் சேகரிக்கப்படுகின்ற குப்பைகள் தற்காலிகமாக போடப்படுவதுடன், அதற்காக அந்த கம்பனிக்கு மாதாந்தம் ரூபா 5,000 வீதம் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் PL/1/5/12 இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் குப்பை முகாமைத்துவத்தின் கீழ் குப்பைகளை வகைப்படுத்தல், குப்பைகளை அப்புறப்படுத்துதல், குப்பைகளை மீள் சுழற்ச்சி தொடர்பாக வழிகாட்டல்கள் மற்றும் அறிவுறைகள் இடையறாமல் செயற்படுத்த வேண்டும் எனினும், பிரதேச சபையில் அவ்வாறான நீண்டகால வேலைத்திட்டமென்று காணப்படவில்லை.

**(இ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

நிலைபேறான அபிவிருத்திக்கான 2030 நிகழ்ச்சி நிரலில் நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள் மற்றும் இலக்காகிய உலகலாவிய சுட்டிகளின் மூலம் சபையின் அதிகார பிரதேசத்தில் பொது மக்களின் வாழ்க்கை நிலைமை மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கான நீண்டகாலத் திட்டம் சபையினால் தயாரித்திருக்கவில்லை.

**3.2 முகாமைத்துவ திறமையின்மை**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபையின் அதிகார பிரதேசத்தில் வீதிகள் ஒளியேற்றுதல் தொடர்பாக மின்சக்தி மற்றும் வலு அமைச்சின் 2010 ஆகஸ்ட் 17 திகதி PE/01/01 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் மின்சார சபையுடன் உடன்படிக்கை ஒன்று மேற் கொண்டிருக்காமை மற்றும் மின் தூண்களில் இலக்கமிடப்பட்டு பதிவேடு ஒன்று பேணப்பட்டமையினால் சபைக்கு கிடைக்க வேண்டிய பணம் மீளளிப்புச் செய்திருக்கவில்லை.

(ஆ) தலைமை அலுவலகம் மற்றும் உப அலுவலகத்திற்கு சொந்தமான 11 கடைகள் தொடர்பாக 2010 திசெம்பர் 27 திகதிய தபபா/ப.பாகொ/2010/02 ஆம் இலக்க உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கையின் பிரகாரம் புதிய வாடகை ஒப்பந்தங்களுக்கு அணுகியிருக்காததுடன், 36 கடைகள் தொடர்பான உடன்படிக்கைகள் காலவதியாகியுள்ளன.

(இ) 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பிரதேச சபையின் 204 கடைகளில் இருந்து ரூபா 6,047,740 இற்கான நிலுவை மீதி மற்றும் தண்டப்பணம் அறவீடு செய்வதற்கான 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**3.3 மனித வள முகாமைத்துவம்**

ஆரம்ப தொகுதிகளை சோந்த 05 பதவிகள் மியைாகக் காணப்பட்டதுடன், இந்த பதவிகளை முறைப்படுத்துவதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**3.4.1 விளைவற்ற மற்றும் பயன்பாட்டு சொத்துக்கள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) கரன்தெனிய பிரதேச சபைக்கு சொந்தமான 02 டிரக்டர்கள், வைப்ரேடின் உருளை ஒன்று மற்றும் டிரக்டர் டேய்லர் ஒன்று என்பன ஒரு வருடத்தை விட கூடுதாலான காலம் முதல் விளைவற்றுக் காணப்பட்டது.

(ஆ) டிரெக்டர் டெய்லர் ஒன்று இலக்கம் இன்றிய நீர் பவுசர், அப்புறப்படுத்த உத்தேசிக்கப்பட்டிருந்த போதிலும் பல வருட காலமாக அப்புறப்படுத்தப்படாமல் சபைக்கு சொந்தமாக வளவு ஒன்றில் நிறுத்தப்பட்டிருந்தது.

**3.5 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கள்கள்**

கரந்தெனிய பிரதேச சபையினால் குசல்கந்த சனசமூக நிலையத்தை நிர்மாணிப்பதற்காக 1999 திசெம்பர் 17 ஆம் திகதி தேசிய வீடமைப்பு அதிகார சபையில் இருந்து ரூபா 1,000,000 கடன் ஒன்று பெறுவற்காக உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. உடன்படிக்கையின் பிரகாரம் குறிப்பிட்ட நிர்மாணவேலை செய்யப்படாமையினால் கடன் தொகை கூட்டுத்தொகையை ரூபா 570,000 தொகை வரை குறைத்து 12% வட்டியுடன் கணக்காய்வு திகதியாகிய 2018 மே 14 ஆந் திகதி செலுத்த வேண்டிய தொகை ரூபா 697,224 தொகையாகக் காணப்பட்டது. இந்த பணத்தின் மூலம் நிறைவேற்றப்பட்ட கருமங்கள் எதுவும் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், 2010 ஆண்டில் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக புத்தகங்கள் அழிவடைந்து காணப்பட்டது.

**3.6 பெறுகை**

**3.6.1 ஒப்பந்த நிர்வாகம்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) கிராமப் பிரதேசங்களில் 1000 கி.மீ பாதை அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் அகனகெடிய குறுக்குப் பாதை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டத்தின் கீழ் வேலை விடயம் ஒன்றான அங்கீகரிக்கப்பட்ட மண் பயன்படுத்தி உருளைகளை பயன்படுத்தி, பாதையில் 930 கன மீற்றர்கள் தயாரிப்பதற்காக ரூபா 665,339 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன், செயற்திட்டம் பூர்த்தி செய்யப்பட்டு, 06 மாதங்கள் கழிவதற்கு முன்னர் போடப்பட்டிருந்த மண் அரித்துச் செல்லப்பட்டு பாதையின் மேற்பகுதியில் வடிகால் ஏற்பட்டிருந்தது.

(ஆ) உள்ளூராட்சி பாதை செயற்திட்டத்தின் கீழ் நெறிமுறை அடிப்படை மானியத்தின் முன் அகனகெடிய குறுக்குப் பாதை II அபிவிருத்தி செய்வதற்காக ரூபா 499,276 இற்கான தொகை ஒன்று செலுத்தப்பட்டிருந்ததுடன், 06 மாதங்களை மிகைக்க முன்னர் 20 மீற்றர் தூரத்திற்கான பாதை கீழிறங்கி முற் தயாரிப்பு கற்கள் அழிவடைந்திருந்தது.

(இ) உள்ளூராட்சி பாதை செயற்திட்டத்தின் கீழ் நெறிமுறை அடிப்படையான மானியத்தின் மூலம் எஸ்கின்வத்த பாஸல் கந்த பாதையில் முற்தயாரிப்பு கற்கள் பதிக்கப்பட்டு

அபிவிருத்தி செய்வதற்கான ரூபா 449,531 இற்கான தொகை ஒன்று செலுத்தப்பட்டிருந்ததுடன், பாதையின் மத்திய பகுதியில் சுமார் 10 மீற்றர்கள் கீழிறங்கி முற் தயாரிப்பு கற்கள் தளந்திருந்தது.

## 4. கணக்களிப்பு பொறுப்பும் நல்லாழுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மற்றும் உள்ளவாறான வருமானம் மற்றும் செலவுகளுக்கு இடையே கீழ் விவரிக்கப்பட்டுள்ளவாறு கணிசமான முரண்கள் அவதானிக்கப்பட்டமையால், பாதீடு ஆக்கபூர்வமான நிதி முகாமைத்துவ கட்டுப்பாட்டு கருவி ஒன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

(அ) 02 செலவு விடயங்களில் அங்கீகரிக்கப்பட்ட எல்லைகளை மிகைத்து செலவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், அவற்றின் எல்லைகளை மிகைத்தல் 17 சதவீதம் மற்றும் 108 சதவீதம் தொகையாக இருந்தது.

(ஆ) 05 செலவு விடயங்களில் சேமிப்பு காணப்பட்டதுடன், அப்பெறுமதி 22 சதவீதம் முதல் 61 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது.

### 4.2 உள்ளக கணக்காய்வு

உள்ளூராட்சி ஆணையாளரின் (தென்மாகாண) 2014 பெப்ரவரி 24 திகதிய தபபா/யஹ/01/நா.ச.லே இலக்கம் கொண்ட சுற்றறிக்கையின் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தர் ஒருவர் நியமனம் செய்யப்பட்டிருந்த போதிலும், போதியளவு உள்ளகக் கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கள்

2009 ஜுன் 09 திகதி DMA/2009(i) இலக்கம் கொண்ட முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கள் நிறுவுவதற்கு மீளாய்வாண்டு இறுதிவரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வப்போது சபையின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருந்ததுடன் பின்வரும் கட்டுபாட்டு பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

| | முறைமை | | குறைபாடு |
|---|---|---|---|
| (அ) | கணக்குகள் மற்றும் பதிவேடுகளை பேணல் | (i) | தேவையான சீராக்கல் மேற்கொண்டு, கணக்கு மீதிகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| | | (ii) | நிதிக்கூற்றுகள் மற்றும் அவற்றிக்கான அட்டவணைகளில் காட்டப்பட்டுள்ள மீதிகளிடையே வித்தியாசங்கள் காணப்பட்டன. |
| | | (iii) | சபையினால் சில பதிவேடுகள் பேணப்பட்டிருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | நிலையான சொத்துக்கள் | (i) | முறையான நிலையான சொத்துப் பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| | | (ii) | கணினிகள் தொடர்பாக தனியாக நிலையான சாத்துக்கள் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | வாகனக் கட்டுப்பாடு | (i) | முறைப் பிரகாரம் வாகனப் பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| | | (ii) | சில வாகனங்கள் எதுவித பயன்தரு கருமங்களுக்கும் ஈடுபடுத்தியிருக்கவில்லை. |
| (ஈ) | வருமானம் சேகரித்தல் | (i) | நிலுவை வருமானத்ததை அறவீடு செய்வதற்கு முறையான வேலைத் திட்டமென்று தயாரிக்கப்பட்டு, செயற்படுத்தியிருக்கவில்லை. |
| | | (ii) | நிலுவை வருமானம் தொடர்பாக காலப் பகுப்பாய்வு ஒன்று தயாரித்திருக்கவில்லை. |
| | | (iii) | 05 வருடங்களுக்கு ஒரு முறை பெறுமதி மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டு வீதவரி வருமானத்தை அதிகரித்துக் கொள்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை |
| (உ) | மனிதவள முகாமைத்துவம் | | மிகை பதவியணிகளை முறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (ஈ) | பாதீட்டுக் கட்டுப்பாடு | (i) | 02 செலவு விடயங்களில் மதிப்பீட்டு ஏற்பாடுகளை மிகைத்து செலவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. |
| | | (ii) | வருமானம் மற்றும் செலவுகள் தொடர்பாக தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு பாதீட்டை திருத்திக் கொள்ளல்கு தொடர்பாக கவனம் செலுத்தியிருக்கவில்லை. |